ஆழி சர்வதேச தமிழிலக்கிய ஆய்விதழ்
Aazhi International Journal of Tamil Literature Studies
திறந்த அணுகல் மற்றும் சகமதிப்பாய்வு இதழ்

E-ISSN: 2583-7931
OPEN ACCESS

# The devotional norm of the Alwars - With Reference to N. Subbu Reddiar's book of 'Sila Nokkil Naalayiram'

# ஆழ்வார்களின் பக்திநெறி : ந. சுப்புரெட்டியாரின் 'சில நோக்கில் நாலாயிரம்' என்னும் நூலினை முன்வைத்து

Dr. T. Nisha
*Assistant Professor of Tamil Scott Christian College (Autonomous), Nagercoil, India*

முனைவர் தோ. நிஷா
*உதவிப் பேராசிரியர், தமிழாய்வு மையம், ஸ்காட் கிறிஸ்தவக் கல்லூரி (தன்னாட்சி), நாகர்கோவில், இந்தியா*

***Article Info:***

Received 9-12-2022 | Accepted 10-01-2023 | Published 31-01-2023
Volume 01 Issue 01 January 2023 | Page No : 12-15

**ABSTRACT**

Naalayira Divya Prabandham is granted by the twelve alwars, it deserves to be admired by the Vaishnava people. There are **4000** songs in the album. Alwars who lived with great devotion to the lord, the autobiographics of those who lived indefatigable are not exactly known Prof. N. Subbu Rettiyar has written many books on the depths of devotion of Alwars. In some respects, this review article based on the book 'Sila Nokkil Naalayiram'. There are 19 research articles in the book. This research articles have been written and published on various occasions. The excellence of the songs of the alwars put before the professor's study is the purpose of this review article is to illustrate. Thirumaal living places are Thiruvarangam, Thiruvenkadam related news and the religious ethics of the alwars describes how they are included in the professor's study.

***Keywords:***

*Alwars, Naalayira Divya Prabandham, Professor, Thiruvarangam, Thiruvengadam*

## முன்னுரை

வைணவர்களின் மறையாகத் திகழும் பன்னிரு ஆழ்வார்களின் பாடல்களை ஆராய்ந்தவர்களில் முதன்மையானவர் பேராசிரியர் ந. சுப்புரெட்டியார். அவருடைய ஆய்வுகளில் வெளிப்படும் ஆழ்வார்களின் பக்தி நெறியை ஆய்வுலகிற்குக் காட்டுவதே இவ்வாய்வுக் கட்டுரையின் கருதுகோளாகக் கொள்ளப்படுகின்றது. ஆழ்வார்களின் பக்தி நெறிக்குக் காரணமாய் அமைந்த இடங்களான திருவரங்கம், திருவேங்கடம் ஆகியன குறித்த செய்திகள் விளக்கப்படுகின்றன. மேலும் ஆழ்வார்களின் சமய நெறியும், கடவுட் கொள்கையும், சமுதாய நோக்கோடு பாடல்களைப் பாடியுள்ள புலமையும் பற்றி எடுத்துரைக்கின்றது இக்கட்டுரை.

## ஆழ்வார்களும் திருவரங்கமும்

தமிழ்நாட்டை வளப்படுத்தும் ஆறுகளுள் காவிரி தலைசிறந்ததாகும். இக்காவிரி பாயும் இடம் தமிழ் நாட்டின் சமய வளர்ச்சிக்கு அடிப்படையாகத் திகழ்ந்தது. வைணவ சமயத்தின் வளர்ச்சிக்குத் திருவரங்கம், திருமாலிருஞ்சோலை, திருவேங்கடம், காஞ்சிபுரம் போன்ற பெருந்தலங்கள் காரணமாக அமைந்தன. எனினும் நீர்வளமும், நிலவளமும் மிகுந்த காவிரியின் கரையான திருவரங்கத்தில் இறைவனின் திருக்கோலம் சிறப்பு மிக்கதாக அமைந்தது. திருவரங்கம் பெரிய கோயில் எனவும் அழைக்கப்பட்டது. 'பக்தி வளத்திற்குப் பெயர்போன இத்தலம் பூலோக வைகுந்தம் என்று போற்றிப் புகழப் பெற்றிருக்கின்றது. ஆழ்வார்கள் பாடிய திருப்பதிகளுள் இதுவே முதன்மையானதாக மதிக்கப் பெறுகின்றது. வடநாட்டினரும் தென்னாட்டினரும் இதனை இந்தியாவின் புனிதத் தலங்களுள் மிகப் புகழ் பெற்றதாகக் கருதுகின்றனர்' (சில நோக்கில் நாலாயிரம், ப.2) இத்திருவரங்கத்தின் சிறப்பை,

**'தென்நாடும் வடநாடும் தொழநின்ற**
**திருவரங்கத் திருப்பதி'[1]** **(பெரியா. திரு. 422)**

என்று கூறுகிறார். சிலப்பதிகாரத்தின் காடுகாண்காதை (35-40) திருவரங்க நாதனுடைய படுத்திருக்கும் திருக்கோலத்தை எடுத்துரைக்கின்றது. திருவரங்கத்தில் திருமாலின் திருக்கோலத்தினை ஆண்டாள், மதுரகவியாழ்வார் தவிர்த்து பத்து ஆழ்வார்களும் பாடிப் புகழ்ந்துள்ளனர்.

மேலும் திருவரங்கத்தின் சிறப்பைப் புராணக் கதைகளாலும் அறிய முடிகிறது. இமயமலைச் சாரலில் கங்கை, யமுனை, சரசுவதி, காவிரி நதிகள் தெய்வக் கன்னிகையர் வடிவம் கொண்டு விளையாடிக் கொண்டிருக்க, வான் நோக்கிச் சென்ற கந்தருவன் இவர்கள் நின்ற திசையில் வணங்கிச் சென்றான். கந்தருவன் யாரை வணங்கிச் சென்றான் என்ற சண்டையில் கங்கை, காவிரி நதிகள் விட்டுக் கொடுக்காமல் வாதிட்டன. வழக்கைத் தீர்க்க வந்த பெருமாள் கங்கைக்குச் சார்பாகத் தீர்ப்புக் கூற காவிரி தவம் கிடந்தாள். திருமால் காவிரியின் தவத்தைப் பாராட்டி 'நான் இங்கே வந்து சயனித்துக் கொள்ளப் போகிறேன். அப்போது நீ எனக்கு மாலையாக அமையும் பேறு பெறுவாய்' (சில நோக்கில் நாலாயிரம், ப.6) என்று வரம் அளித்தார். கங்கையைப் போன்று புனிதம் ஆகிய காவிரியை,

**'கங்கையிற் புனிதம் ஆய காவிரி நடுவுபாட்டுப்**
**பொங்குநீர் பரந்து பாயும் பூம்பொழில் அரங்கந் தன்னுள்'[2]** **(திருமாலை. 894)**

என்று தொண்டரடிப் பொடியாழ்வார் பாராட்டுகின்றார். இவ் ஆழ்வார்கள் திருவரங்கத்தில் உறையும் திருமாலைத் தாயாகவும், மகளாகவும், நாயகியாகவும் எண்ணிப் பாடும் பாடல்களும் உள்ளன.

## ஆழ்வார்களும் திருவேங்கடமும்

'மாலவன் குன்றம்' எனப் பாரதியாரால் புகழப்பெறும் திருத்தலமே திருவேங்கடம் ஆகும். தமிழ் இலக்கியங்களில் சிலப்பதிகாரமும், புறப்பொருள் வெண்பா மாலையும் திருவேங்கடம் குறித்துப் பேசுகின்றன. சிலப்பதிகாரத்தில் 'நெடியோன் குன்றம்' எனக் கூறப்படுகின்றது.

**'நெடியோன் குன்றமும் தொடியோள் பௌவமும்**
**தமிழ்வரம் புறுத்த தண்புனல் நாடு'[3]** **(சிலம்பு. வேனிற்காதை. 1-2)**

ஆழ்வார்களால் பாடப்பட்ட இத்தலம் பதினொன்றாம் நூற்றாண்டில் புகழடைந்தது. இராமானுஜர் இவ்விடத்திற்கு மூன்று முறை வந்து சிறப்படைந்தார். இயற்கை எழில் நிறைந்தது திருவேங்கடம், இத்தலம் முதலாழ்வாரின் உள்ளத்தைக் கவர்ந்தது. நம்மாழ்வார் மூன்றாம் திருவாய்மொழியில் திருமலையைப் புகழ்ந்து பாராட்டியுள்ளார்.

**'சென்று சேர் திருவேங்கட மாமலை**
**ஒன்றுமே தொழ நம் வினை ஓயுமே'[4]** **(திருவாய். 2926)**

உலகையே காத்த இறைவன் திருவேங்கடத்தில் தங்கியிருப்பதால் அத்தலத்தை வணங்கும்போது வினைகள் நீங்கும் என்பது கருத்தாகும். மேலும் இத்தலத்தின் இயற்கை அழகில் மனதைப் பறிகொடுத்த எல்லா ஆழ்வார்களும் இத்தலத்தைப் புகழ்ந்துள்ளனர் என்பது சிறப்பாகும்.

## ஆழ்வார்களின் சமய நெறி

மக்களின் அன்றாட வாழ்க்கை ஒழுங்குபெற நடைபெறுவதற்கு அமைத்துக் கொண்ட நன்னெறிகளின் தொகுதியே சமயம் என வழங்கப்படுகிறது. 'சமயம் என்பது இன்று, நேற்று தோன்றியதல்ல, நினைப்பதற்கும் எட்டாத நெடுங்காலமாகவே அது நிலவி வருகின்றது. உலவி வருகின்றது என்றும் சொல்லலாம்.' (வாய்மொழியும் வாசகமும், ப.1) வைணவ சமயத்தின்படி, இறைவனை அடைவதற்குச் சித்து, அசித்து, ஈசுவரன் என்னும் மூன்று தத்துவங்களும் இன்றியமையாதன ஆகும். 'ஞானத்திற்கு இடமான ஆன்மா சித்து என வழங்கப் பெறுகின்றது. அணுவின் அளவினையுடைய இந்த ஆன்மா ஆனந்த வடிவத்தைக் கொண்டது. அசித்து என்பது அறிவில்லாத பொருள். இது விகாரத்திற்கு இடமானது. இந்த அசித்து இராஜஸ தாமஸங்கள் கலவாத சுத்த தத்துவம் என்றும், இராஜஸ தாமஸங்கள் (உலக இன்பத்தில் பற்று) கலந்த மிச்ர தத்துவம் (தூய்மையற்ற நல்லியல்பு) என்றும், சத்துவம் முதலிய குணங்களற்ற சத்துவ சூனியம் என்றும் மூன்று வகைப்படும்' (சில நோக்கில் நாலாயிரம், பக்.23) இறைவன் சத்தியம், ஞானம், ஆனந்தம், அனந்தம் ஆகியவற்றின் வடிவமாக இருப்பவன். இடத்தாலும், காலத்தாலும் அளவிடப் பெறாதவன். எங்கும் நிறைந்திருப்பவன் என்கிறார் நம்மாழ்வார்.

**'எவரும் யாவையும் எல்லாப் பொருளும்**
**கவர்வு இன்றித் தன்னுள் ஒடுங்க நின்ற**
**பவர்கொள் ஞானவெள்ளச் சுடர் மூர்த்தி'[5]** **(திருவாய். 2801)**

என்று பாடியுள்ளார்.

ஆன்மா இறைவனை அடைய வைணவ சமயத்தில் இரண்டு வழிகள் கூறப்பெறுகின்றன. ஒன்று பக்தி; மற்றொன்று பிரபத்தி. கருமயோகம், ஞானயோகம் மூலம் பக்தியோகம் சரியான பக்குவ நிலையினை அடைகின்றது.

**'பரிவது இல் ஈசனைப் பாடி**
**விரிவது மேவல் உறுவீர்!**
**பிரிவகை இன்றி நல்நீர் தூய்**
**புரிவதும் புகை பூவே'[6]** **(திருவாய். 2730)**

என்ற பாசுரத்தில் பலனை எதிர்பாராது இறைவனுக்குச் செய்யப்பெறும் கருமத்தால் மனம் தூய்மையடைகின்றது எனக் கூறப்படுகிறது.

வீடுபேறு குறித்து வைணவ சமயத்தில் வீடு என்பது தனி உலகம் என குறிப்பிடப்பட்டுள்ளது.

**'புலன் ஐந்து மேயும் பொறிஐந்தும் நீங்கி**
**நலம் அந்தம் இல்லது ஓர் நாடு புகுவீர்'[7]** **(திருவாய். 2867)**

என்ற பாடலில் 'நலம் அந்தம் இல்லது ஓர் நாடு' என்பதை அழிவில்லாத இன்பத்தையுடைய நாடு எனவும், அதனை அடைந்தார்க்கு இன்பமும் அழிவில்லாதது எனவும் கூறப்படுகின்றது. மேலும் வைகுந்தம், இலங்குவான், பொன் உலகு என்றும் கூறப்பட்டுள்ளன.

## ஆழ்வார்களின் கடவுட் கொள்கை

வைணவ சமயம் உயர்ந்த கொள்கைகளை தன்னகத்தே கொண்டது. ஆழ்வார்களின் முழுமுதற் கடவுளாகிய நாராயணன் முழுமுதற் கடவுளாகத் திகழ்பவன். இதனை பரகாலர்,

**'பிறப்பொடு மூப்பு ஒன்று இல்லவன் இறப்பு**
**எதிர் காலம் கழிவும் ஆனான்'[8]** **(பெரி. திரு. 4:3:2)**

என்று குறிப்பிடுகிறார். மேலும் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நாற்பலன்களையும் உயிர்களுக்கு அழிப்பவன். படைத்தல், அழித்தல், காத்தல் என்னும் முத்தொழில்களையும் செய்யும் இறைவன் என நம்மாழ்வாரும், பரகாலரும் போற்றியுரைக்கின்றனர்.

**'பூவளர் உந்திதன்னுள் புவனம் படைத்து**
**உண்டு, உமிழ்ந்த தேவர்கள் நாயகன்'[9]** **(பெரி. திரு. 9:9:1)**

என்று எடுத்துரைக்கிறார். 'நித்திய விபூதியாகிய பரமபதத்தில் அவனுக்கெனத் தனியான திவ்விய மங்கள உருவம் உண்டு. அவ்வுருவம் ஈடும் எடுப்பும் அற்ற பேரொளியினை உடையது. பேரழகு வாய்ந்து கண்டாரை ஈர்ப்பது' (சில நோக்கில் நாலாயிரம், ப.54) இறைவனுடைய திவ்விய மங்கள உருவம் பரத்துவம், வியூகம், விபவம், அந்தர்யாமித்துவம், அர்ச்சாவதாரம் என்னும் ஐந்து வகையாய் வெளிப்படும்.

**'கண்கள் சிவந்து பெரியவாய்**
**வாயும் சிவந்து கனிந்துள்ளே**
**வெண்பல் இலகு சுடர்இலகு**
**விலகு மகர குன்டலத்தன்**
**கொண்டல் வண்ணன் சுடர்முடியன்**
**நான்கு தோளன் குனிசார்ங்கன்**
**ஒண்சங்கு கதைவாள் ஆழியான் ஒருவன்'[10]** **(திருவாய். 3524)**

என்னும் பாடலில் இறைவனின் திவ்விய மங்கள உருவம் பாடப்பட்டுள்ளது.

## ஆழ்வார்களின் சமுதாய நெறி

ஆழ்வார்களின் சமுதாய நெறியை ஆறு பகுதிகளாகப் பேராசிரியர் ஆராய்ந்துள்ளார். தொண்டரடிப்பொடியாழ்வார் திருப்பள்ளியெழுச்சி என்னும் தலைப்பில் பத்து பாசுரங்களடங்கிய சிறு பிரபந்தத்தைப் படைத்துள்ளார். இப்பாடல்கள் பண்டைத் தமிழரிடையே காணப்பட்ட மரபாகும். உறங்கும் அரசனைத் துயிலெழுப்புதல் தமிழ்ச் சமுதாயத்தில் நிலவி வந்தது. அரசனை எழுப்புவதை 'துயிலெடை நிலை' எனக் குறித்தனர். இம்மரபைப் பின்பற்றியே திருப்பள்ளியெழுச்சி பாடப்பட்டுள்ளது.

உலகியல் வழக்காகவும், நாடக வழக்காகவும் சித்தரிக்கப்பெறும் சங்க இலக்கியத்தில் காணப்பெறும் அகத்திணைக் கூறுகள் ஆழ்வார் பாடல்களில் காணப்படுகின்றன. நம்மாழ்வார் தம்மைத் தலைவியின் நிலையில் நிறுத்தி நாரை, அன்னம், கிளி, பூவை, வண்டினங்களைத் தூது விடுவதாகப் பாடியுள்ளப் பாடல்கள் இலக்கிய நயம் மிகுந்தவை.

**'அம்சிறைய மடநாராய்!**
**அளியத்தாய்! நீயும்நின்**
**அம்சிறைய சேவலுமாய்'[11]** **(திருவாய். 2708)**

என்ற பாசுரத்தில் நம்மாழ்வார் நாரையைத் தூது விடுவதைக் காணமுடியும்.

ஆழ்வார்களின் காலத்தில் கல்வியால் நிரம்பிய புலவர்கள் வறுமையில் வாடினர். ஆனால் செல்வத்தை நோக்காகக் கொண்டு பாடிய புலவர்கள் வளமையால் நிறைந்திருந்தனர். இதனைப் பேராசிரியர் ஆய்ந்துள்ளார். கவிதை பாடும் திறனுடைய புலவர்கள் வறுமையால் வாடியதை நம்மாழ்வார் பாடல்களில் புலப்படுத்தியுள்ளார்.

**'சொன்னால் விரோதம் இது ஆகிலும்**
**சொல்லுவன் கேண்மினோ'[12]** **(திருவாய். 3, 9, 1)**

என்று தமது அறிவுரையைத் துவங்குகிறார்.

செல்வத்தை விரும்பி வாழும் மனிதனைப் பாடுவதால் எந்த பயனும் இல்லை. தகுதியில்லாத மனிதரை வள்ளல் எனப் புகழ்ந்து பாடுவது தவறு உழைத்துப் பிழைப்பதை விடுத்து இவ்வாறு பாடிப் பிழைப்பது தகுதியாகாது எனத் திருவாய்மொழியில் சமூக நிலையில் தன்னை நிலைநிறுத்திக் கடமையாற்றும் விதத்தில் பாடியுள்ளார் நம்மாழ்வார்.

**'என் ஆவது எத்தனை நாளைக்குப் போதும் புலவீர்காள்**
**மன்னா மனிசரைப் பாடிப் படைக்கும் பெரும் பொருள்?'[13]** **(திருவாய். 2988)**

அழிந்து போகின்ற மனிதர்களைப் பாடிப் படைக்கும் பெரிய பொருள் எத்தனை நாள்களுக்குப் போதுமானதாகும் என்பது இப்பாடலின் கருத்தாகும்.

## முடிவுரை

ஆழ்வார்களின் பாடல்களில் ஆழங்கால் பட்டு ஆராய்ந்த பேராசிரியரின் அருங்கருத்துக்கள் இக்கட்டுரையில் விளக்கப்பட்டன. வைணவ சமயத்தின் திருத்தலங்களுள் திருவரங்கமும், திருவேங்கடமும் முதலிடம் பெறுகின்றன. பழந்தமிழ் இலக்கியங்களிலும் இத்தலங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. வைணவ சமய நெறியின் படி இறைவன் எங்கும் நிறைந்தவன். பிறருக்கு நன்மை செய்வதால் பலன் கிடைக்கும். வீடுபேறு என்பதை அழிவில்லா இன்பமுடைய வீடு எனப் பாடியுள்ளனர். நாற்பலன்களை உயிர்களுக்கு அளிக்கும் இறைவன் முத்தொழில்களையும் செய்பவன் இறைவனுக்குத் தனித்துவமான திவ்விய மங்கள உருவம் உண்டு. ஆழ்வார்கள் வெறும் இறைவனை மட்டும் பாடாமல் சமுதாயக் கண்ணோட்டத்துடன் திருப்பள்ளியெழுச்சியையும், அக இலக்கியம் சார்ந்தும், புலவர்கட்கு அறிவுரை கூறும் விதமாகவும் பாடல்களைப் பாடியுள்ளதைப் பேராசிரியரின் ஆய்வின் மூலம் அறிந்து கொள்ள முடிகின்றது.

## அடிக்குறிப்புக்கள்

1. பெரியாழ்வார் திருமொழி, 422
2. திருமாலை, 894
3. சிலப்பதிகாரம், வேனிற்காதை. 1-2
4. திருவாய்மொழி, 2926
5. மேலது, 2801
6. மேலது, 2730
7. மேலது, 2867
8. பெரிய திருமொழி, 4: 3:2
9. பெரிய திருமொழி, 9:9:1
10. திருவாய்மொழி, 3524
11. மேலது, 2708
12. மேலது, 3,9,1
13. மேலது, 2988

### துணை நூற்பட்டியல்


1. இரா வ, கமலக்கண்ணன், உரையாசிரியர். *நாலாயிர திவ்விய பிரபந்தம்* முதல் தொகுதி. சென்னை, வர்த்தமானன் பதிப்பகம், 2015.
2. இரா வ, கமலக்கண்ணன், உரையாசிரியர். *நாலாயிர திவ்விய பிரபந்தம்* நான்காம் தொகுதி. சென்னை, வர்த்தமானன் பதிப்பகம், 2015.
3. ந, சுப்புரெட்டியார். *சில நோக்கில் நாலாயிரம்*. சென்னை, பாரி நிலையம், 1983.
4. ந, சுப்புரெட்டியார். *வாய்மொழியும் வாசகமும்*. சென்னை, உமா பதிப்பகம், 1993.
5. புலியூர் கேசிகன். *சிலப்பதிகாரம் மூலமும் உரையும்*. சென்னை, சாரதா பதிப்பகம், 2015.


### References


1. R V, Kamalakannan, Text Editor. *Nalayira Dhivya Pirabantham*-Volume I. Chennai, Varthamanan Publications, 2015.
2. R V, Kamalakannan, Text Editor. *Nalayira Dhivya Pirabantham*-Volume IV. Chennai, Varthamanan Publications, 2015.
3. N, Subbureddiar. *Sila Nokkil Naalayiram*. Chennai, Paari Nilayam, 1983.
4. N, SubbuReddiar. *Vaaymozhium Vaasakamum*. Chennai, Uma Publications, 1993.
5. Puliyoorkesigan. *Silapathikaram*. Chennai, Saradha Publications, 2015.


**How to cite this article:** T, Nisha. "The devotional norm of the Alwars - With Reference to N. Subbu Reddiar's book of 'Sila Nokkil Nalayiram'". *Aazhi International Journal of Tamil Literature Studies*, vol. 1, no. 1, Jan. 2023, pp. 12-15, https://aijtls.com/index.php/aijtls/article/view/4.

This is an open access journal, and articles are distributed under the terms of the Creative Commons Attribution-Non Commercial-ShareAlike 4.0 International License, which allows others to remix, tweak, and build upon the work non-commercially, as long as appropriate credit is given and the new creations are licensed under the identical terms.